**கவனிக்க**.- *2018.12.07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2102 - 2018 දෙසැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2018.12.14

*2102 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 222 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, சனவரி மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

221-B81476-353 (2018/12)

# கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள்

## அறிவித்தல்

கடனிறுக்க வகையின்மை என வழக்குத்தீர்ப்பு

*கொழும்பு 06, பிரட்றிக்கா வீதி, 17 A, 7/2 ஆம் இலக்கத்தில் வசித்தவரும் தற்போது கொழும்பு 11, 2 ஆம் குறுக்கு வீதி, புதிய மௌலானா சந்தை, 184/186, 7/7 ஆம் இலக்கத்தில் வசிப்பவருமாகிய இராமையா நாராயணசாமி என்பவர், கடனிறுக்க வகையற்ற நிலையிலுள்ளார் என கொழும்பு மாவட்ட நீதிபதி கௌரவ ஆர். பி. டி. பி. பி. ரத்நாயக்க அவர்கள் DSP 09/2018 ஆம் இலக்க வழக்கில் 2018, யூலை 16 ஆந் திகதியன்று தீர்ப்பு வழங்கியுள்ளார் என பொதுமக்களுக்கும் மற்றும் அனைவருக்கும் அறிவிக்கப்படுகிறது.*

*கடன் கொடுத்த யாருக்காவது மற்றும் / அல்லது ஏதேனும் தாபனங்களுக்கு பெற்ற கடனை மீளச்செலுத்தாதிருப்பின் இவ் அறிவித்தல் வெளியீட்டை கவனத்தில் கொண்டு தங்களது உரிமைக்கோரிக்கையை கடன்பட்டவருக்கு உடனடியாக முன்வைக்கவும்*

*சீலா ஜயவர்தன,*
*மனுதாரரின் சட்டத்தரணி.*

*12-559*

---

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண மேல் நீதிமன்றம்

குடியியல் நீதிமன்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் (கொழும்பில் நடாத்தப்படும்)

*கண்டி, கொழும்பு வீதியில், இலக்கம் 233 கொண்ட இடத்தின் டபிள்யூ. டி. ஆர். சமரகோன் என்ட் சன்ஸ் (பிரைவேட்) லிமிடட் பற்றிய விடயம் சம்பந்தமானது.*

வழக்கு இலக்கம் : *எச். சீ. (சிவில்) 38/15 சீஓ*

*மற்றும்*

*டபிள்யூ. டி. ஆர். சமரகோன் என்ட் சன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் ஐ நீதிமன்றத்தினால் ஒடுக்கப்படுவதற்காக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 534 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 270 (e) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் விண்ணப்பம் பற்றிய விடயம்.*

*நெதர்லாந்து, பிரீடா மயுரிற்ஸ்டார்ட் 9, 4811 EN இல் எனர்ஜி கொமர்ஸ் பிவீ.*

*மனுதாரர்*

*தனது குடியியல் நீதிமன்ற அதிகாரங்களை கொழும்பில் நடைமுறைப்படுத்தும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்தால் மேற்படி டபிள்யூ. டி. ஆர். சமரகோன் என்ட் சன்ஸ் (பிரைவேட்) லிமிடட் கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று 2015, யூலை மாதம் 14 ஆந் திகதி மேலே பேயர் குறிப்பிடப்படும் மனுதாரரான எனர்ஜி கொமர்ஸ் பிவீ. சார்பில் டீ. எல். மற்றும் எவ். டி. சேரம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி மனு 2019, மாச்சு மாதம் 12 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்படுவதற்கென பணிக்கப்பட்டுள்ளது எனவும், மேற்படி மனுவின் மீது கட்டளையொன்று ஆக்கப்படுவதை ஆதரிக்கவோ ஆட்சேபிக்கவோ விரும்பும் மேற்படி கம்பனியின் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவரும் விசாரணையின்போது அந்த நோக்கத்திற்கென நேரிலோ அல்லது தமது சட்டத்தரணியின் மூலமோ தோற்றலாம்; மனுவின் பிரதியொன்றை, தேவைப்படுத்தும் மேற்படி கம்பனியின் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவருக்கும் அதற்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் கொடுப்பனவின்மீது அப்பிரதி கொடுத்துதவப்படும் என்று இத்துடன் அறியத்தருகின்றது.*

*டீ. எல். மற்றும் எவ். டி சேரம் அவர்கள்,*
*இல. 47, அலெக்சென்திரா பிளேஸ்,*
*கொழும்பு - 7.*

***குறிப்பு**.- மேற்படி மனு விசாரணை செய்யப்படும் போது நேரில் தோற்ற உத்தேசிக்கும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்காக தமது உத்தேசம் பற்றிய எழுத்திலான அறிவித்தலை சட்டத்தரணி சந்தன சிறிவர்தன அவர்களுக்கு சேர்ப்பித்தல் வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலில் ஆளின் பெயரும், முகவரியும் அல்லது நிறுவனம் எனின் நிறுவனத்தின் பெயரும்,*

*முகவரியும் குறிப்பிட்டு ஆளினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரது அல்லது அதன் சட்டத்தரணியால் (எவருமிருப்பின்) கையொப்பமிட்டு 2019, மாச்சு மாதம் 11 ஆந் திகதியன்று பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் சேர்க்கப்படுதல் வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்பப்படுமாயின் மேற்படி திகதியன்று பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக போதிய கால அவகாசத்துடன் அஞ்சல் செய்தல் வேண்டும்.*

*12-144*

---

## ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

### மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

*(அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் (கொழும்பில் நடைபெறுகின்றது)*

*இலக்கம் 21, 2 ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு 01 இல் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள V. வடுமால் (பிரைவட்) லிமிடட் (PV 72331) ஒடுக்குதல் பற்றிய விடயம் தொடர்பானது.*

வழக்கு இலக்கம் : CHC 84/2018 CO.

*மற்றும்*

*தன்மை : சீஓ நடைமுறை : சுருக்கம்*

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ் உள்ள நீதிமன்ற நியாயாதிக்கத்தின்படி கம்பனியை ஒடுக்குதல் தொடர்பான மனு.*

*V. வடுமால் (பிரைவட்) லிமிடட் இலக்கம் 21, 2 ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு 01.*

*மனுதாரர்*

*குடியியல் நீதிமன்ற நியாயாதிக்கத்தை அமுல்படுத்தல் தொடர்பாக கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண, நீதிமன்றத்தினால் மேற்குறித்த கம்பனியை ஒடுக்குவதற்காக V. வடுமால் (பிரைவட்) லிமிடட் இலக்கம் 21, 2ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு 01 இனால் 2018, நவெம்பர் மாதம் 1 ஆந் திகதி அந்நீதிமன்றத்தில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டதெனவும், அம்மனு 2019, பெப்புருவரி மாதம் 5 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது எனவும் அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும் மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*திரு. சன்ஜேய் பொன்சேக்கா,*
*சட்டத்தரணி,*
*இல. 171, போபிட்டிய, பமுனுகம.*

**குறிப்பு**.- *அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின்போது தோற்றுவதற்கு எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட திரு. சன்ஜெய் பொன்சேக்கா, சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் ஆளின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் ஆள் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2019, பெப்புருவரி மாதம் 4 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.*

*எம். ஜே. எஸ். பொன்சேக்கா,*
*மனுதாரரின் சட்டத்தரணி.*

*12-170*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*